# விலைகள், கூலிகள், தொழில்நிலை

## பொதுவான விலை மாற்றங்கள்

1989 இல் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம், முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவானதாகக் காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1988 இன் 14.0 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1989 இல் 11.6 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. எனினும் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி முக்கியமாக ஆண்டின் முதற் சில மாதங்களிலேயே செறிந்திருந்தது. 1989 இன் இரண்டாம் அரைப்பகுதி பெருமளவான விலை அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தது. ஆண்டின் இறுதியில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு (1988 திசெம்பருக்கு மேலாக 1989 திசெம்பர்) 1988 சனவரிக்கு மேலாக 1989 சனவரியில் ஏற்பட்ட 10.1 சதவீதங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15.1 சதவீதமாக விளங்கியது. முதலாந்தரச் சந்தைமட்டத்தில் கூட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் (மொ.வி.சு.) ஆண்டுச் சராசரி 1988இன் 17.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தால் மட்டும் அதிகரித்ததிலிருந்து, விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது.

1989 இன் முதற் காலாண்டில் பாதுகாப்பு நிலைமையில் காணப்பட்ட தற்காலிகமான முன்னேற்றம் அக்காலப்பகுதியில் விலைகளில் மிதமான போக்கினை ஏற்படுத்தியது. எனினும் 1989 இன் நடுப்பகுதியிலிருந்து பாதுகாப்பு நிலையில் ஏற்பட்ட பின்னடைவு உற்பத்தி, வர்த்தகம், போக்குவரத்து என்பனவற்றைப் பாதித்ததன்மூலம் விலைகளை உயர்வடையச் செய்தது. வரட்சி நிலைமைகள், செலாவணி வீதத் தேய்வு காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உணவு விடயங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள், பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட மீளாய்வு என்பன பொது விலை மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய ஏனைய காரணியாகும்.

1989 இல் பொருளாதாரத்தின் பண வீக்கப் போக்கினைக் கட்டுப்படுத்துவதற்குப் பல நாணயக் கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வங்கி வீதம் மேல்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமை, வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் மீதான பகுதியளவான உச்சவரம்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்த கொள்கை வழிமுறைகள் நாணய விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்ததுடன் விலைகள் மீதான தாக்கத்தையும் இலகுவாக்கின. இத்துடன் இவ்வாண்டில் உறுதியாகப் பின்பற்றப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பொருளாதாரத்தில் காணப்பட்ட மேலதிகத் திரவத் தன்மையைக் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைக்க உதவின.

## விலைகள்

### நுகர்வோர் விலைகள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு.) ஆண்டுச் சராசரி 1989 இல் 11.6 சதவீதத்தால் அதிகரித்து, 1988 இல் ஏற்பட்ட 14.0 சதவீத விலை அதிகரிப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்
1974 = 100
மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

எனினும் ஆண்டின் பிற்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட துரிதமான அதிகரிப்பு 1989 திசெம்பரின் புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பை 15.1 சதவீதத்திற்கு உயர்வடையச் செய்தது.

சுட்டெண்ணின் மாதாந்த அசைவு வழமையான பருவகாலப் போக்கினைப் பிரதிபலிக்கவில்லை. சனாதிபதித் தேர்தலை உடனடுத்த காலப்பகுதியில் பாதுகாப்பு நிலையில் ஏற்பட்ட தற்காலிக முன்னேற்றம் ஆண்டின் முதல் இரு மாத காலப்பகுதியிலும் விலைகளை வீழ்ச்சியடையச் செய்தது. மாச்சிலிருந்து விலைகள் தொடர்ந்து உறுதியாக அதிகரித்தன. ஆண்டின் மூன்றாம் காற்பகுதியில் பாதுகாப்பு நிலை மோசமடைந்தமை இக்காலப்பகுதியில் விலையின் தாக்கத்தை உயர்வாக வைத்திருந்தது. விலைகளில் ஏற்பட்ட கணிசமான உயர்வை ஆண்டின் இறுதி இரு மாதங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

உணவுக்கான துணைச் சுட்டெண் சராசரியாக 10.3 சதவீதத்தால் அதிகரித்தது. இது முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான அதிகரிப்பாகும். (15.1 சதவீதம்) விலைகளில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் ஏறக்குறைய 62 சதவீதம் உயர்வான உணவு விலைகள் காரணமாக ஏற்பட்டதாகும். ஆடைகளின் விலைகள் 16.7 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தன. 1988 இன் தொடர்பான அதிகரிப்பு 4.7 சதவீதமாக மட்டும் இருந்தது. எரிபொருள் வெளிச்சம் விடயங்களின் விலைகள் முந்திய ஆண்டின் அதிகரிப்பான 13.0 சதவீதத்திற்கெதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் 12.0 சதவீதத்தால் அதிகரித்தன. பல்வகை விடயங்களின் தொகுதி 1988 இல் பதிவு செய்யப்பட்ட 14.1 சதவீத அதிகரிப்பைத் தாண்டி 15.8 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 1.34

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100**

| | சராசரி | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1987 இற்கு மேலாக 1988 | 1988 இற்கு மேலாக 1989 | 1987 திசெம்பருக்கு மேலாக 1988 | 1988 திசெம்பருக்கு மேலாக 1989 |
| எல்லா விடயங்களும் ... | 744.1 | 830.2 | 14.0 | 11.6 | 15.0 | 15.1 |
| உண்ட வகைகளின்படி. | | | | | | |
| உணவு ... | 802.0 | 884.6 | 15.1 | 10.3 | 15.7 | 13.5 |
| உடை ... | 419.8 | 490.0 | 4.7 | 16.7 | 5.6 | 32.8 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 1,535.1 | 1,718.9 | 13.0 | 12.0 | 16.0 | 11.1 |
| வாடகை ... | 109.8 | 109.8 | — | — | — | — |
| பல்வகை ... | 742.6 | 860.2 | 14.1 | 15.8 | 15.9 | 19.7 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி.

உணவு விடயங்களில் அரிசியின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு மிகக் கூடுதலாக இருந்தது. மொத்த விலை அதிகரிப்பில் தனியே அரிசி விலைகள் மாத்திரம் 18 சதவீதத்திற்குப் பொறுப்பாகவிருந்தன. வரட்சி நிலைமைகள், அரிசியின் பிரதியீட்டுப் பொருட்களான கோதுமை மா, பாண் என்பனவற்றின் விலைகள் மீளாய்வு செய்யப்பட்டமை, உற்பத்தி வர்த்தகம் போக்குவரத்து என்பவற்றில் ஏற்பட்ட தடங்கல் என்பன அரிசியின் விலையை மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தின. 1985 தொடக்கம் மாற்றமுறாது நிலையாகவிருந்த பாண், கோதுமை மா என்பனவற்றின் விலைகள் அவற்றின் மீதான உதவு தொகையை முற்றாக நீக்கும் நோக்குடன் பல தடவைகளில் மேல்நோக்கி உயர்த்தப்பட்டன. செலாவணி வீதத் தேய்வு, வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாகச் சீனி, பால் மா என்பனவற்றின் விலைகளும் அதிகரித்தன. இறைச்சி, முட்டை, பயறு வகை, செத்தல் மிளகாய் என்பன தொடர்பாகவும் கணிசமான விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாண்டில் அதிகரித்த உற்பத்தியின் காரணமாகத் தேங்காய், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் விலைகள் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தமை ஏனைய விடயங்களில் பதிவு செய்யப்பட்ட மிகக் கூடியளவு விலை அதிகரிப்புக்களை ஓரளவு ஈடுசெய்ய உதவின. 1984 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித மாற்றமுமின்றியிருந்த பெற்றோல், தன்னியக்க டீசல் என்பனவற்றின் விலைகள் இவ்வாண்டில் இரண்டு முறை திருத்தப்பட்டதுடன் இது ஏனைய விடயங்களினது விலையதிகரிப்புக்களின்மீது மறைமுகமான மேலதிக தாக்கத்தினையும் கொண்டிருந்தது.

இவ்வாண்டில் ஆடை விடயங்களினது விலைகள் மிகக் கூடியளவிற்கு உயர்வடைந்தன. இது உயர்ந்த வலுச் செலவு, கூலிகளின் மேல்நோக்கிய திருத்தம், வெளிநாட்டு விலைகளின் உயர்கின்ற போக்கு, அதே போன்று செலாவணி வீதங்களின் தேய்வு போன்ற காரணங்களின் இணைந்த விளைவாகும்.

விறகின் விலையில் ஏற்பட்ட உயர்வு எரிபொருளும் வெளிச்சத்திற்குமான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 12.0 சதவீதமான அதிகரிப்பிற்கு முக்கிய உதவு காரணியாக இருந்தது. பெற்றோல் தன்னியக்க டீசல் என்பனவற்றின் விலைகள் அதிகரித்தபோதும் மண்ணெண்ணெயின் விலை இவ்வாண்டில் மாற்றமுறாதிருந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் சிகரட், மது என்பனவற்றின் மீதான கலால் தீர்வை பலமுறை திருத்தப்பட்டதுடன் இவ்விடயங்களின் உயர்ந்த விலைகள் பல்வகைத் தொகுதிகளுக்கான துணைச் சுட்டெண்ணில் கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. அத்துடன் பல்வகைத் தொகுதியில் மருந்து, கல்வி சார்ந்த இன்றியமையாத பொருட்கள், புதினத் தாள்கள், சலவைக் கட்டணங்கள் என்பனவும் இவ்வாண்டில் உயர்வடைந்தன.

## மொத்த விற்பனை விலைகள்

முதன்மைச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகள் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினால் கண்காணிக்கப்படுகின்றன. 1989 இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 9.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1988 திசெம்பரைவிட 1989 திசெம்பரில்) சுட்டெண் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 9.3 சதவீத உயர்வினை விஞ்சியதாக 18.4 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

அட்டவணை 1.35

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974=100)

| விடயம் | சாசரி 1988 | சாசரி 1989 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம்: 1987 இனைவிட 1988 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம்: 1988 இனைவிட 1989 | புள்ளிஒருப் புள்ளி சதவீத மாற்றம்: 1987 திசெம்பரை விட 1988 திசெம்பரில் | புள்ளிஒருப் புள்ளி சதவீத மாற்றம்: 1988 திசெம்பரை விட 1989 திசெம்பரில் |
|---|---|---|---|---|---|---|
| எல்லா விடயங்களும் ... | 488.7 | 532.9 | 17.8 | 9.0 | 9.3 | 18.3 |
| உணவு ... | 471.9 | 493.3 | 22.3 | 4.5 | 7.9 | 16.1 |
| வெறிக் குடிவகைகள் ... | 502.9 | 573.0 | 14.0 | 13.9 | 9.1 | 22.0 |
| புடவை, காலணிகள் ... | 329.4 | 343.6 | 1.9 | 4.3 | 2.1 | 6.0 |
| தாள் உற்பத்திகள் ... | 452.2 | 550.1 | 4.5 | 21.0 | 8.7 | 16.2 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் ... | 259.4 | 291.9 | 14.1 | 12.5 | 23.0 | 6.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் ... | 685.1 | 762.3 | — | 11.3 | — | 22.8 |
| உலோகமல்லா உற்பத்திகள் ... | 658.2 | 735.9 | 10.8 | 11.8 | 9.2 | 12.8 |
| உலோக உற்பத்திகள் ... | 358.6 | 469.6 | 11.2 | 31.0 | 19.5 | 43.9 |
| போக்குவரத்து கருவிகள் ... | 321.3 | 395.9 | 2,4 | 23.2 | 15.9 | 17.2 |
| மின் கருவிகளும் வழங்கல்களும் ... | 346.1 | 427.8 | 12.2 | 23.6 | 19.4 | 37.2 |
| பொறிகள் ... | 264.4 | 285.7 | 12.3 | 8.1 | 18.1 | 3.1 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 754.3 | 1,002.9 | 4.3 | 33.0 | 24.7 | 22.4 |
| பல்வகை ... | 827.1 | 1,051.2 | 27.4 | 27.1 | 23.5 | 36.2 |
| **துறைவகைப்படி எண் I** | | | | | | |
| உள்நாட்டு வகை ... | 383.3 | 466.0 | 12.6 | 21.6 | 17.0 | 23.6 |
| இறக்குமதி வகை ... | 403.4 | 458.7 | 11.3 | 13.7 | 11.2 | 23.7 |
| ஏற்றுமதி வகை ... | 826.9 | 772.1 | 28.3 | — 6.6 | 0.3 | 8.5 |
| **துறைவகைப்படி எண் II** | | | | | | |
| நுகர்ச்சிப் பொருட்கள் ... | 489.6 | 519.5 | 20.4 | 6.1 | 8.7 | 16.1 |
| இடைநிலைப் பொருட்கள் ... | 495.3 | 588.4 | 10.1 | 18.8 | 11.0 | 20.8 |
| முதலீட்டுப் பொருட்கள் ... | 439.3 | 503.6 | 10.7 | 14.6 | 12.1 | 17.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப்போன்றே, மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் காணப்பட்ட அதிகரிப்பும் 1989 இன் பின்னரைப் பகுதியிலேயே செறிவாகக் காணப்பட்டது. உண்மையில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் ஆண்டின் முதல் சில மாதங்களில் குறைவடைந்து செல்லும் போக்கினைக் காட்டியதுடன் ஆண்டின் மிகக் குறைந்த மட்டம் ஏப்பிறலில் (491.5) பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒகத்திலிருந்தும் சுட்டெண் மிக விரைவாக அதிகரித்தது. தேயிலையின் ஏற்றுமதி விலை வலுவுற்றமையே ஆண்டின் பின்னரைப் பகுதியில் சுட்டெண்ணை உயர்த்திய முக்கிய உதவுக் காரணியாக இருந்தது. சுட்டெண் அதன் ஆகக்கூடிய மட்டமான 594.1 இனை 1989 திசெம்பரில் அடைந்தது.

உயர்ந்த உணவு விலைகள் 1989 இன் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஏறத்தாள மூன்றிலொரு பங்கிற்கு உதவின. பெற்றோலிய உற்பத்திகள், எரி பொருள் மற்றும் வெளிச்சம் ஆகிய விடயங்களும் பல்வகையின் கீழ் வகைப் படுத்தப்பட்ட விடயங்களும் சுட்டெண்ணின் உயர்விற்கு உதவிய ஏனைய முக்கிய காரணிகளாகும்.

உணவிற்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு 1988 இன் உயர்வான 22.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மிதமான வகையில் 4.5 சத வீதமாக இருந்தது. தேங்காய், தேங்காய் உற்பத்திகளின் குறைந்த விலைகள், நெல், கோதுமைத் தானியம், மரக்கறிகள், செத்தல் மிளகாய் போன்ற ஏனைய விடயங்களின் விலை அதிகரிப்புக்களை எதிரீடு செய்வதில் முக்கிய பங்கினை வகித்தன.

1984 ஆம் ஆண்டிலிருந்தும் மாற்றங்களின்றியிருந்த பெற்றோலிய உற் பத்திகளுக்கான துணைச் சுட்டெண் பெற்றோல், தன்னியக்க டீசல் என்பன வற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் விளைவாக 11.3 சத வீதத்தினால் அதிகரித்தது. எரிபொருள் வெளிச்சத்திற்கான துணைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் 33.0 சத வீதங் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1988 இல் 27.4 சதவீதத்தினால் உயர்வுற்ற பல்வகை விடயங்களுக்கான துணைச் சுட் டெண் 1989 இல் 27.1 சதவீதத்தினால் தொடர்ந்தும் அதிகரித்தது. இரசாயன, இரசாயன உற்பத்திகள், உலோக உற்பத்திகள், உலோகமல்லா உற்பத்திகள், போக்குவரத்துக் கருவிகள், மின் துணைக் கருவிகளும் வழங்கல்களும் என்பனவும் கணிசமான விலை அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

துறைவகையான பகுப்பாய்வுகளின்படி உள்நாட்டு விடயங்களுக்கான துணைச் சுட்டெண் 1988 இன் 12.6 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 21.6 சதவீதங் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைக் காட்டியது. இறக்குமதி விலைகள் 1988 இன் 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13.7 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதி விலைகள் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 28.3 சதவீதங் கொண்ட உயர்வுக்கு மாறாக 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தன.

பொருட்களின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு, இடைநிலைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட 18.8 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. முன்னைய ஆண்டில் இது தொடர்பான அதிகரிப்பு 10.1 சதவீதமாக இருந்தது. முதலீட்டுப் பொருட்களின் விலைகள் 1988 இன் 10.7 சதவீத அதிகரிப்பினை விஞ்சியதாக 14.6 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மாறாக நுகர்வுப் பொருட்களின் விலைகள் முன்னைய ஆண்டின் 20.4 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதத்தினால் மட்டும் உயர்வடைந்தது.

**கூலிகள்**

அரச ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் தொழில் நிலைப்பிரிவு என்பன வற்றின் மீதான நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் விதந்துரைப்புக்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட 1988 நவெம்பரில் அடையப்பட்ட அதே மட்டத்தில் 1989 இல் நிலையாக விளங்கின. ஆண்டுச் சராசரி அடிப்படையில் 1989 இல் பெயரளவுக் கூலி மட்டங்கள் 1988 இன் கூலி மட்டங்களைவிட உயர்வாக

இருந்தன. எனினும் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டன. நன்கமைந்த தனியார்துறையில் கூலி நிர்ணய சபைக்குட்பட்ட பல வர்த்தகங்களிலுள்ள ஆகக் குறைந்த கூலிகள் திருத்தியமைக்கப்பட்டன. இதனால் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் என்பனவற்றிலுள்ள கூலியாட்களுக்கான உண்மைக் கூலிகளில் முன்னேற்றத்தினைத் தோற்றுவித்தது. வேலையாட்களின் பெரும்பாலான வகைகளுக்குரிய உண்மைக் கூலிகள் மோசமடைந்த முன்னைய ஆண்டினைப்போலன்றி உண்மைக் கூலிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் கட்டிடவாக்க, கட்டுமான நடவடிக்கைகளிலும் தேயிலை பறித்தல், தேய்காய் பிடுங்கல், தேங்காய் உரித்தல் போன்ற பெருந்தோட்டச் சிறு உடைமைகளில் காணப்படும் சில முக்கிய நடவடிக்கைகளிலும் அவதானிக்கப்பட்டமையை நன்கமையாத துறையின் கூலி மட்டங்களின் மீதான தற்காலிகத் தரவுகள் எடுத்துக் காட்டின.

நன்கமைந்த துறை

சம்பளங்கள், தொழில்நிலைப் பிரிவு என்பனவற்றின் மீதான நிருவாகச் சீர்திருத்தங்கள் குழுவின் விதந்துரைப்புக்களை நடைமுறைப் படுத்தியதைத் தொடர்ந்து அரசதுறை ஊழியர்களின் கூலி மட்டங்கள் 1988 இல் கணிசமாக அதிகரித்தன. 1989 இல் அரச ஊழியர்களின் கூலியமைப்பில் மேலும் மாற்றங்கள் ஏதுமிருக்கவில்லை. ஊழியர்களுக்குக் கொடுபடற்பாலதான வாழ்க்கைச் செலவுப்படியும் 1988 யூலையில் இருந்த மட்டமான ரூ. 260 இல் தொடர்ந்தும் நிலையாக இருந்தது.

அரச ஊழியர்களின் கூலி வீசச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு அரச ஊழியர்களின் சராசரிப் பெயரளவு கூலி மட்டங்கள் 1989 இல் 8.2 சதவீதத்தினால் அதிகரித்தன. 1988 இல் இது தொடர்பான அதிகரிப்பு 31.1 சதவீதமாக இருந்தது. உண்மை நியதிகளில் அரச ஊழியர்களின் கூலிகள் கடந்த ஒன்பது ஆண்டுகளில் அத்தகைய ஊழியர்களின் உண்மைக் கூலிகள் மிக உயர்ந்த மட்டத்தைப் பதிவு செய்த ஆண்டான 1988 இனைவிட 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அரசதுறையிலுள்ள நிறைவேற்றுத்தரமல்லா அனைத்து அலுவலர்களினதும் சிற்றூழியர்களினதும் பெயரளவுக் கூலி அதிகரிப்புக்கள் முறையே 8.8 சதவீதமாகவும், 7.4 சதவீதமாகவும் அமைந்து உண்மைக் கூலிகள் முறையே 2.2 சதவீதத்தினாலும், 3.5 சதவீதத்தினாலும் மோசமடைந்தமையைப் பிரதிபலித்தன. அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் சராசரி பெயரளவுக் கூலிகள் 11.0 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டில் இவ்வகை ஊழியர்கள் 34.0 சதவீதமான கூலி அதிகரிப்பினைப் பெற்றனர். அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் உண்மைக் கூலிகள் 1988 உடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாற்றமின்றி நிலையாக இருந்தன.

நன்கமைந்த தனியார்துறையில் கூலி நிர்ணய சபைக்குட்பட்ட வர்த்தகத்திலுள்ள அனைத்து வேலையாட்களுக்குமான ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு, கூலிகள் உண்மை நியதிகளில் 15.6 சதவீதத்தினால் அதிகரித்தன. 1988 இல் தொடர்பான அதிகரிப்பு 20.9 சதவீதமாக இருந்தது. இவ்வூழியர்களின் பொதுவான ஆகக் குறைந்த கூலி அதிகரிப்புக்கள் பணவீக்கத்தினை ஈடுசெய்ய மிகக் கூடுதலாகப் போதுமானதாக இருந்ததுடன், 1989 இல் அவர்களின் உண்மைக் கூலிகள் 3.8 சதவீதத்தினால்

## கூலி வீதச் சுட்டெண்கள்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்







இலங்கை மத்திய வங்கி.

அதிகரித்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு வகைகளிடையே கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றிலுள்ள வேலையாட்களின் ஆகக் குறைந்த கூலி அதிகரிப்புக்கள் மிக உயர்வாக விளங்கி, 23.3 சதவீதமாக விளங்கின. முன்னைய ஆண்டில் இவ்வகை வேலையாட்கள் 6.0 சதவீதமான பெயரளவு கூலி அதிகரிப்பினை மட்டும் பெற்றனர். கைத்தொழில் வர்த்தகத்திலுள்ள வேலையாட்களின் உண்மைக் கூலிகள் முன்னைய ஆண்டின் 6.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 1989 இல் 10.5 சதவீதத்தினால் அதிகரித்தன. வேளாண்மையிலுள்ள வேலையாட்களின் கூலிகள் 1989 இல் 15.2 சதவீதத்தினால் உயர்வடைந்தன. முன்னைய ஆண்டில் பெருந்தோட்டத்துறையில் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக வேளாண்மை வேலையாட்களின் கூலிகள் 25.2 சதவீதத்தினால் கணிசமாக உயர்வடைந்தன. 1989 இல் இவ்வகைக்கான கூலிகளில் ஏற்பட்ட அசைவிற்குப் பெருந்தோட்ட வேலையாட்களுக்குக் கொடுபடற்தக்கதாக இருந்த வேறுபட்ட வாழ்க்கைச் செலவுப்படிகள், அதேபோன்று தெங்கு வளர்ப்பு, தயாரிப்பு வர்த்தகம் என்பவற்றில் கொடுபடத்தக்க ஆகக் குறைந்த கூலிகளில் செய்யப்பட்ட திருத்தம் என்பன முக்கிய காரணமாக இருந்தன. வேளாண்மையிலுள்ள வேலையாட்களின் உண்மைக் கூலிகள் 1989 இல் 3.4 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1989 இல் பணிகளிலுள்ள வேலையாட்களின் கூலி மட்டங்கள் 7.1 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்ததுடன் அவர்களின் உண்மைக் கூலிகள் 3.8 சதவீதத்தினால் மோசமடைந்தன. எனினும் முன்னைய ஆண்டில் பணிகளிலுள்ள வேலையாட்கள் 16.7 சதவீதங் கொண்ட கணிசமான கூலி அதிகரிப்பினைப் பெற்றனர். இது உண்மைக் கூலிகளின் 2.5 சதவீதங் கொண்ட அதிகரிப்பிற்கு சமமானதாகும்.

கூலி நிர்ணய சபைக்குட்பட்ட வர்த்தகங்களிடையே புடவை தயாரிப்பு, கயிற்று மெத்தை, சிலிர்ப்புத் தும்பு ஏற்றுமதி, இறப்பர் ஏற்றுமதி, தோல் காலணி தயாரிப்பு, காலுறைத் தயாரிப்பு வர்த்தகங்கள் என்பனவற்றின் ஆகக் குறைந்த கூலிகள் திருத்தியமைக்கப்பட்டன.

**நன்கமையாத துறை**

நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் பரந்துள்ள ஏறத்தாள 100 நிலையங்களிலிருந்து மாதாந்த அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட நன்கமையாத துறை நடவடிக்கைகளிலுள்ள நாளாந்த கூலிகள் மீதான தகவல்கள் பெறப்படுகின்றன. இத்திட்டம் நெற்செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு, சிறு உடைமைகள் சிறு அளவிலான கட்டிடவாக்க, கட்டுமான நடவடிக்கைகள் ஆகிய துறைகளை உள்ளடக்குகின்றது.

நன்கமையாத துறையில் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் 1989 ஆம் ஆண்டிற்கான தற்காலிகத் கவல்களை அட்டவணை 1.36 தருகின்றது. நெற்செய்கையில் பெயரளவு கூலிகள் 5 சதவீதத்திற்கும் 14 சதவீதத்திற்குமிடையில் உயர்வுற்றிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உண்மைக் கூலிகளில் சிறிதளவு முன்னேற்றத்தினைப் பதிவு செய்த உழுதல், நாற்றுநடல் (பெண்கள்) ஆகிய இரண்டும் தவிர்ந்த பெரும்பாலான நடவடிக்கைகளின் உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தன. 1989 இல் தெங்கு சிறு உடைமைகளில் தேங்காய் பறித்தலுக்கான கூலிகள் மிகக் கூடியளவில் அதிகரித்ததுடன் உண்மைக் கூலிகளும் கணிசமாக முன்னேற்றமடைந்தன. இறப்பர் பயிர்ச்செய்கையில் 1989 இல் பெயரளவு கூலிகளின்

அட்டவணை *1.36*

**கூலிவீதச் சுட்டெண்கள்**

(1978 திசெம்பர்=100)

| | 1988 | | 1989 | | 1988 இனைவிட 1989இல் சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | |
| எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் | 364.0 | 117.0 | 396.0 | 114.4 | 8.8 | — 2.2 |
| சிற்றூழியர்கள் ... | 414.1 | 133.1 | 444.6 | 128.4 | 7.4 | — 3.5 |
| எல்லா மத்திய அரச ஊழியர்கள் ... | 390.0 | 125.4 | 421.8 | 121.9 | 8.2 | — 2.8 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 331.5 | 106.6 | 367.8 | 106.3 | 11.0 | — 0.3 |
| **2. கூலிச்சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | |
| வேளாண்மை தொழிலாளர்கள் ... | 378.4 | 121.6 | 435.9 | 125.7 | 15.2 | 3.4 |
| கைத்தொழிலும் வர்த்தகமும் தொழிலாளர்கள் ... | 271.1 | 87.4 | 334.9 | 96.6 | 23.3 | 10.5 |
| பணிகள் தொழிலாளர்கள் ... | 229.5 | 73.8 | 245.9 | 71.0 | 7.1 | — 3.8 |
| கூலிச்சபை வர்த்தகத் தொழிலாளர்கள் * ... | 335.8 | 107.9 | 388.1 | 112.0 | 15.6 | 3.8 |

மூலங்கள் : தொழிற்றிணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

* வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம், பணிகள் என்பனவற்றிலுள்ள தொழிலாளர்களுக்கான இணைந்த சுட்டெண்.

வளர்ச்சி வீதங்கள் *1988* இனைவிட ஓரளவு மெதுவாக இருந்தன. பாலெடுத்தலுக்கான உண்மைக் கூலிகள் மோசமடைந்தவேளையில் உரமிடலுக்கான உண்மைக் கூலிகள் மிதமாக அதிகரித்தன. *1988* இல் கணிசமான வளர்ச்சியைக் கொண்டிருந்த தேயிலைப் பயிர்ச்செய்கையில் பெண்களின் கூலிகள் *1989* இல் தொடர்ந்தும் ஒப்பீட்டு ரீதியில் வளர்ச்சியைக் கொண்டிருந்தன. இவ்வேலையாட்களின் உண்மைக் கூலிகள் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தன. நன்கமையாததுறையில் கட்டிடவாக்க கட்டுமான நடவடிக்கைகளின் பெயரளவு கூலிகள் *1988* இனைவிடக் கணிசமான உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். கட்டிடவாக்க கட்டுமானத்திலுள்ள அனைத்து வகை வேலையாட்களுக்குமான உண்மைக் கூலிகள் இந்நடவடிக்கைகளின் உண்மைக் கூலிகளில் மோசமான தன்மை அவ்தானிக்கப்பட்ட முன்னைய ஆண்டிற்கு மாறாக முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன.

அட்டவணை 1.37

**நன்கமையாத துறையிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் நாடு முழுவதற்குமான நாளாந்த சராசரி கூலி வீதங்கள் 1988—1989**

| நடவடிக்கை | | தொழிலாளர் வகை | 1988 | | 1989** | | 1988இனை விட 1989இல் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பெயரளவு கூலி வீதங்கள் * | உண்மைக் கூலி வீதபகள் | பெயரளவு கூலி வீதங்கள் * | உண்மைக் கூலி வீதங்கள் * | பெயரளவு கூலி வீதங்கள் * | உண்மைக் கூலி வீதங்கள் * |
| 1. | நெற்செய்கை | | | | | | | |
| | உழுதல் ... | ஆண் | 59.15 | 25.29 | 67.25 | 25.77 | 13.7 | 1.9 |
| | விதைத்தல் ... | ஆண் | 50.51 | 21.60 | 54.48 | 20.88 | 7.9 | — 3.3 |
| | நாற்று நடல் ... | ஆண் | 44.78 | 19.15 | 48.64 | 18.64 | 8.6 | — 2.7 |
| | ... | பெண் | 35.08 | 15.00 | 39.75 | 15.23 | 13.3 | 1.5 |
| | அறுவடை ... | ஆண் | 46.02 | 19.68 | 48.36 | 18.53 | 5.1 | — 5.8 |
| | ... | பெண் | 35.98 | 15.39 | 39.42 | 15.11 | 9.6 | — 1.8 |
| 2. | தெங்கு (சிறு உடைமை) | | | | | | | |
| | பிடுங்கல் ... | ஆண் | 64.77 | 27.70 | 79.21 | 30.36 | 22.3 | 9.6 |
| | உரித்தல் ... | ஆண் | 64.71 | 27.67 | 73.03 | 27.99 | 12.9 | 1.2 |
| 3. | இறப்பர் (சிறு உடைமை) | | | | | | | |
| | பால் எடுத்தல் ... | ஆண் | 38.91 | 16.64 | 42.04 | 16.11 | 8.0 | — 3.2 |
| | ... | பெண் | 34.68 | 14.83 | 37.61 | 14.41 | 8.5 | — 2.8 |
| | வளமாக்கியிடல் ... | ஆண் | 46.12 | 19.72 | 52.45 | 20.10 | 13.7 | 1.9 |
| 4. | தேயிலை (சிறு உடைமை) | | | | | | | |
| | பறித்தல் ... | பெண் | 30.51 | 13.05 | 35.21 | 13.49 | 15.4 | 3.4 |
| | கத்தரித்தல் ... | ஆண் | 53.43 | 22.85 | 57.52 | 22.05 | 7.7 | — 3.5 |
| 5. | கட்டடவாக்கம் | | | | | | | |
| | தச்சர் ... | ஆண் | 88.87 | 38.00 | 102.95 | 39.46 | 15.8 | 3.8 |
| | தேர்ச்சியற்ற உதவியாளர் ... | ஆண் | 45.28 | 19.36 | 53.11 | 20.36 | 17.3 | 5.2 |
| | முதன்மைக் கொத்தனார் ... | ஆண் | 84.99 | 36.34 | 97.51 | 37.37 | 14.7 | 2.8 |
| | தேர்ச்சியற்ற உதவியாளர் ... | ஆண் | 44.74 | 19.13 | 52.30 | 20.04 | 16.9 | 4.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1980ஆம் ஆண்டு கணிப்பிற்கான அடிப்படை ஆண்டாக கொள்ளப்பட்டது.

** தற்காலிகம்.

## தொழில் நிலை

தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1989 இல் அரச, தனியார் ஆகிய இரு துறைகளினதும் தொழில்நிலை மிதமாக அதிகரித்தது. அரச துறையினுள், அரச நிறுவனங்களின் தொழில்நிலை அதிகரித்திருக்கையில், அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

அரசின் அரசதுறை தொழில் நிலையினதும், அரசுசார் நிறுவனங்களின் தொழில் நிலையினதும் மதிப்பீடுகள், மத்திய வங்கியின் புள்ளி விபரவியல் திணைக்களத்தால், அரசதுறை வருடாந்த தொழில்நிலை ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவின் அடிப்படையில் அமைந்ததாகும். அத்துடன் அரச துணைத்துறை தொழில்நிலை மீதான மதிப்பீடுகள் திறைசேரியின் வருடாந்த தொழில்நிலை மதிப்பீடுகளுடன் இணக்கம் காணப்பட்டன. தற்காலிகத் தரவு

களின்படி, மொத்த அரசதுறை தொழில்நிலை 3.9 சதவீதத்தால் மிதமாக அதிகரித்து 1989 இன் இறுதியில் 1,338,200 ஆக விளங்கியது. இது முழுமையாக அரச நிறுவனங்களின் தொழில்நிலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். அரச அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் உள்ள அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய இத் துணைத் துறை 1989 இறுதியில் 588,500 ஆக விளங்கி முன்னைய ஆண்டைவிட 9.9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அரசுசார் நிறுவனங்களில் தொழில்புரிந்தோரின் மொத்த எண்ணிக்கை 749,700 ஆக அமைந்து 1988 இல் இத்துணைத்துறையில் காணப்பட்ட தொழில்நிலை மட்டத்தைவிடச் சிறிதளவு குறைவாக (0.43 வீதம்) விளங்கியது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தொழிலாளர்களின் எண்ணிக்கையின் கணிசமான வீழ்ச்சிக்கு மத்தியிலும், உடலுழைப்புத் தொழிலாளர்களே அரசதுறைத் தொழிலாளர்களின் மிகப் பெரிய தனியான பிரிவாக விளங்கியமையைத் தொழில் வகைப்படியான பகுப்பு வெளிப்படுத்தியது. எனினும், அரசதுறையின் மொத்தத் தொழில் நிலையில் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பங்கு 1988 இன் 42.4 சதவீதத்திலிருந்து 1989 இல் 40.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1989 இல் அரசதுறையில், தகைமைத் தொழிலாளர்கள், தொழில்நுட்பம் மற்றும் அதோடு தொடர்புடைய தொழிலாளர்கள் 256,900 ஆகவும், எழுதுவினைஞர் அதோடு தொடர்புடைய தொழிலாளர்கள் 237,500 ஆகவும் விளங்கி முறையே இரண்டாவது, மூன்றாவது பெரிய பிரிவுகளாக விளங்கின. முன்னைய பிரிவின் தொழில்நிலை மட்டம் 14.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் பின்னைய பிரிவின் தொழில்நிலை மட்டம் சிறிதளவால் மட்டும் அதிகரித்தது. 1989 இல் தகைமைத் தொழிலாளர்கள், தொழில்நுட்பம் மற்றும் அதோடு தொடர்புடைய தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பிற்கு 35,000 ஆசிரியர்கள், தாதிகள், மருத்துவ மாதுகள், சில மருத்துவம் சம்பந்தமான அதிகாரிகள் என்போரின் ஆட்சேர்ப்பு முக்கியமாகப் பங்களிப்புச் செய்தது. அரச துணைத் துறையில் ஆகக்கூடிய தொழிலாளர் எண்ணிக்கையைக் கொண்ட இவ்வகை மொத்தத்தில் 40.6 சதவீதத்திற்கு வகை கூறியது.

அரசதுறையில் பணித் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 14.1 சதவீதத்தால் அதிகரித்து, 1989 இறுதியில் 165,400 ஆக விளங்கியது. இவ்வகையின் தொழில்நிலையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்குப் பாதுகாப்புப் பணிகளுக்கான அதிகரித்த ஆட்சேர்ப்பு பங்களிப்புச் செய்தது. ஓட்டுநர்களாகவும் போக்குவரத்துக் கருவிகள் தொழிற்பாட்டாளர்களாகவும், தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. அரசதுணைத் துறையில் இவ்வகையில் அதிகரிப்பு 9 சதவீதமாக இருந்தது. உடலுழைப்புத் தொழிலாளர்கள் வகையின் வேளாண்மை, கால்நடை, காட்டுத்தொழில், மீன்பிடி, உற்பத்தி என்பவற்றுடன் தொடர்பான தொழிலாளர்களின் எண்ணிக்கை 1989 இல் வீழ்ச்சியடைந்தது. பின்னைய வகையில் தொழிலிலமர்த்தப்பட்ட எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி வேளாண்மை அலுவலர்களைத் தற்போது எழுதுவினைஞர்கள், மற்றும் அது தொடர்பான வேலையாட்களின் பகுப்பின்கீழ்ப் பாகுபடுத்திப் பதவிப்பெயர் மாற்றப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

அரசுசார் துணைத்துறையில் உடலுழைப்பாளர்கள் வகை தவிர்ந்த எல்லா வகைகளிலும் உள்ள தொழில் நிலை சிறிதளவால் அதிகரித்தோ அல்லது 1988 இன் அதே மட்டத்திலேயோ தொடர்ந்திருந்தது. இலங்கைக் காப்புறுதி, அரச

பொறியியல், அரச வர்த்தகம் (புடவைகள்) கூட்டுத்தாபனங்கள், வட பிரதேச போக்குவரத்துச் சபை, தேசிய சேமிப்பு வங்கி என்பன தொழில்நிலையில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்திருக்கையில் கொழும்பு வடக்கு, தென் பிரதேச போக்குவரத்துச் சபைகள், மட்பாண்டம், அரச அகழ்வும் கனிப்பொருள் அபி விருத்தியும், மர முந்திரி ஆகிய கூட்டுத்தாபனங்களின் தொழில்நிலை வீழ்ச்சி யடைந்தது.

அரசதுறை தொழில்நிலை ஆய்வின்படி, அரச துறையில் தொழிலிலமர்த்தப் பட்டோர்களில் 82.1 சதவீதமும், அரசுசார் துறையில் தொழிலிலமர்த்தப் பட்டோர்களில் 71.9 சதவீதமும் ஆண்களாக இருந்தனர். பெண்கள் வகையில் கூடிய அளவில் பெண் தோட்டத் தொழிலாளர்கள் விளங்கியதுடன், இரண் டாவது கூடிய எண்ணிக்கையாகப் பெண்கள் எழுதுவினைஞர்களாகவும் அத னுடன் தொடர்புபட்டவற்றிலும் தொழிலிலமர்த்தப்பட்டனர். அரசதுறைத் தொழில் நிலையில் 92 சதவீதத்திற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஊழியர்கள் வகை கூறினர்.

தனியார் துறையின் தொழில்நிலை மீதான வருடாந்த தொடர்த் தரவுகள் கிடைக்காமை காரணமாக இத்துறையில் தொழில் நிலையை மதிப்பிடுவதற்கு ஏனைய குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. வியாபார நடவடிக்கைகள், திட்ட மிட்ட முதலீடுகள் மீது இலங்கை மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையின்படி 1986/87 நிதியாண்டில் தனியார் துறை கூட்டு நிலையங்களின் தொழில்நிலை 15 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. ஊழியர் சேம நிதியத்துடனான தொழிற்படு கணக்குகளின் எண்ணிக்கை 1987 இன் இறுதியில் 4,280,989 இலிருந்து 1988 இன் இறுதியில் 4,472,866 இற்கு 4.5 சதவீதத் தால் அதிகரித்தது. 1989 இறுதியில் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட சேம நிதியங் களில் உள்ள உறுப்பினர்களின் ஒன்று சேர்ந்த எண்ணிக்கை 149,200 ஆக விளங்கியது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கீழுள்ள தொழில் முயற்சிகள் 1989 இறுதியில் 61,429 ஆட்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியதுடன், இது முன்னைய ஆண்டைவிட 12.5 சதவீதம் அதிகமானதாகும். புடவைகள், ஆடைகள், தோல் உற்பத்திகள் ஆகிய கைத்தொழில்களில் தொழிலி லமர்த்தப்பட்டவர்கள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கைத்தொழில் முயற்சிகளில் தொழிலிலமர்த்தப்பட்டவர்களின் மொத்தத்தில் 70 சதவீதத்திற்கு வகை கூறினர். கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் கீழ்த் தொழிற்பாட்டில் இருந்த செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1989 இன் இறுதியில் 308 ஆக விளங்கியது. இவற்றில் 181 கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும், 52 செயற்றிட்டங்கள் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளும் அமைந்துள்ளன. எஞ்சிய 75 செயற்றிட்டங்களும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் பகுதிக்கு வெளியே அமைந்துள்ளன. 1989 இற்கான வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்ளார்ந்த தொழிலாளர்களை ஈர்க் கும் இயலளவு 4,999 ஆக விளங்கியது. 1989 இல் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு நிறுத்தப்பட்டதிலிருந்து கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவினதும், வெளிநாட்டு மதியுரைக் குழுவினதும் வெளிநாட்டு முத லீட்டையும் தொழிற்பாடுகளையும் முன்னேற்றுவதற்கும் இணைப்பதற்கும் தனி யான கூட்டமைப்பு நிறுவப்பட்டது. இக்கூட்டமைப்பின் நோக்கம் வெளிநாட்

டுடன் இணைந்த முதலீட்டிற்கான புதிய விண்ணப்பங்களின் பரிசீலனையை விரைவுபடுத்துவதாகும். 1989 வரை வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவின் செயற்றிட்டங்களில் தொழிலாளர்களை ஈர்க்கும் மொத்த அளவு 53,697 ஆக விளங்கியதுடன் இதில் 64 சதவீதத்தினர் தயாரிப்புக் கைத்தொழில்களில் தொழிலமர்த்தப்பட்டிருந்தனர்.

சாதகமற்ற வளர்ச்சிச் செயலாற்றம், தொடரும் உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றின் மத்தியிலும் 1989 இல் சுய வேலைவாய்ப்பு மூலமும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் மூலமும் தொழில் நிலையை உருவாக்குவதற்கு அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் வறிய மக்களுக்கு உற்பத்தித் தொழில் நிலை மூலமாக அவர்களிடமுள்ள வெளிப் படுத்தப்படாத திறமைகளையும் அவர்களின் சொத்துக்களின் அடிப்படையையும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் உதவி பெறும் குடும்பங்கள் பயிற்சியுடன் இணைந்த உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் மாதமொன்றிற்கு ஆகக் குறைந்தது 24 நாட்கள் உற்பத்தி நடவடிக்கை கொண்ட தொழிலை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். இச் செயற்றிட்டங்களின் முக்கியமான ஒரு தன்மை யாதெனில், கூட்டுத்தாபனங் களை உள்ளடக்கிய முழு அரசதுறையும் புதிய தொழில் நிலைகளை வழங்குவதில் முக்கிய கூறாக வறுமை ஒழிப்பைத் தெரிந்தெடுத்தமையாகும். அரச வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட பலதரப்பட்ட கடன் திட்டங்களால் வழங்கப்பட்ட கொடு கடன் வசதிகளும் 1989 இல் சுயவேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதை நோக்க மாகக் கொண்டிருந்தது. இலங்கை வெளிநாட்டு தொழில் வாய்ப்புப் பணி யகத்தினுல் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் கட்டளைகளில் ஏற் பட்ட 20 சதவீதங் கொண்ட அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வெளி நாடுகளில் தேர்ச்சியுள்ளதும், தேர்ச்சியற்றதுமான தொழிலாளர்களுக்கானகேள்வி கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது.